269—

தார்ச் சாலை சீரமைத்தல்

***61985— திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆண்டிப்பட்டி தொகுதி, சுருளியாறு நீர் மின் நிலையம் வழியாகச் செல்லும் குள்ளப்பகவுண்டன்பட்டி-லோயர் கேம்ப் பிரதான தார்ச் சாலையை சீரமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

'மக்களால் நான், மக்களுக்காக நான்' என்ற தாரக மந்திரத்தோடு அமைதி, வளம், வளர்ச்சி என ஒவ்வொரு நாளும் மக்கள் பணி ஒன்றே என் வாழ்வின் இலட்சியம் எனத் தன்னிகரில்லா திட்டங்களைத் தந்து, நல்லாட்சி புரிந்துவரும், தினம், தினம் நான் வணங்கும் குல தெய்வம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிப்பட்டி தொகுதி, சுருளியாறு நீர் மின் நிலையம் வழியாகச் செல்லும் குள்ளப்பகவுண்டன்பட்டி-லோயர் கேம்ப் பிரதான தார்ச் சாலையைச் சீரமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயமான மாநாடு, 11 நாடுகள், 23 நிறுவனங்கள், 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், 2.43 இலட்சம் கோடி ரூபாய் முதலீடு, சுமார் 5 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு போன்ற ஒப்பற்ற முதலீட்டு மாநாட்டை நடத்தி (மேசையைத் தட்டும் ஒலி) சாதனை படைத்த எங்கள் குடும்ப தெய்வம், காவல் தெய்வம் தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைப்*

2015 செப்டம்பர் 15]

பற்றி அன்றே சொன்னார் பேரறிஞர் அண்ணா அவர்கள். அஞ்சா நெஞ்சு படைத்த இலட்சியவாதிகள்தான் ஒரு நாட்டிற்குக் கிடைக்கக்கூடிய ஒப்பற்ற செல்வங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையில், நாட்டிற்குக் கிடைத்த ஒப்பற்ற செல்வம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றே சொன்னார் பேரறிஞர் அண்ணா. "அஞ்சா நெஞ்சு படைத்த இலட்சியவாதிகள்தான் ஒரு நாட்டிற்கு கிடைக்கக்கூடிய ஒப்பற்ற செல்வங்கள்" என்று (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையில், நம் நாட்டிற்கு, தமிழ்நாட்டிற்கு, இந்திய நாட்டிற்குக் கிடைத்த ஒப்பற்ற செல்வம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களை வணங்கி, அந்த தார்ச் சாலையைச் சீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டு அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-10

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி தொகுதி, குள்ளப்பகவுண்டன்பட்டி-லோயர் கேம்ப் பிரதான தார்ச் சாலை, குள்ளப்பகவுண்டன்பட்டி கிராமத்திலிருந்து முடனாரி வன தணிக்கைச் சாவடி, சுருளியாறு மின் நிலையம் வழியாக கம்பம்-குமுளி பிரதான சாலையை அடையும் தார்ச் சாலை மொத்தம் 13.3 கிலோ மீட்டர் நீளம் கொண்டதாகும். குள்ளப்பகவுண்டன்பட்டி கிராமத்திலிருந்து முடனாரி வன தணிக்கைச் சாவடி வரை காப்புக் காட்டிற்கு வெளியே 1.3 கிலோ மீட்டர் தூரம் உள்ள சாலை மாநில நெடுஞ்சாலைத் துறையினால் அமைக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறது. முடனாரி வன தணிக்கைச் சாவடியிலிருந்து நாயக்கர்துறவு எல்லை வரை செல்லும் சாலையானது சுமார் 10 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேகமலை வன உயிரினச் சரணாலயத்திலுள்ள வண்ணாத்திப்பாறை காப்புக் காட்டின் வழியாகச் செல்கிறது. நாயக்கர்துறவிலிருந்து சுருளியாறு மின் நிலையம் வழியாக கம்பம் செல்லும் குமுளி பிரதான சாலை, lower camp வரை காப்புக் காட்டிற்கு வெளியே கூடலூர் நகராட்சியில் 3 கிலோ மீட்டர்

தூரம் செல்கின்றது. மேலே குறிப்பிட்ட இந்த இரண்டு சாலைகளும் சுருளியாறு நீர் மின் திட்டத்தின் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்காக தமிழ்நாடு மின்சார வாரியத்தால் காப்புக் காட்டின் உள்ளே 10 கிலோ மீட்டர் தூரத்திலும், காப்புக் காட்டின் வெளியே 3 கிலோ மீட்டர் தூரத்திலும் 1972 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பயன்பாடு மற்றும் பராமரிப்பில் உள்ளது. எனினும், இந்தச் சாலையைச் சீரமைக்க அனுமதி வேண்டி தமிழ்நாடு மின்சார வாரியத்திடமிருந்து வனத் துறைக்கு கருத்துரு ஏதும் இதுவரை பெறப்படவில்லை. அவ்வாறு கருத்துரு பெறப்பட்டால், மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு உரிய ஆய்வுக்குப் பின்னர், தேசிய வன உயிரின வாரியம் மற்றும் உச்ச நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 270, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

270—

ஆரம்ப சுகாதார நிலையம்

***48912—திரு. க. பீம்ராவ்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரவாயல் தொகுதி, அயப்பாக்கம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை மிகப் பணிவோடு வணங்குகிறேன். மக்கள்தொகை மற்றும் இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு இடையே உள்ள தூரம் ஆகியவை